**தம்புள்ள பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம் - கட்டம் I - 2015**

தம்புள்ள பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம் - கட்டம் I இன் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் இந்தியாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2012 சனவரி 17 ஆந் திகதிய கடன் உடன்படிக்கையின் கீழ் இச் செயற்திட்டம் அமுலாக்கப்படுகின்றது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. தம்புள்ள, கலேவல, சிகிரியா, ஹபரன, பலுகஸ்வேவ, நுவல, பலகொல்ல மற்றும் கெக்கிராவ பகுதிகளில் வசிக்கின்ற ஏறத்தாழ 300,000 மக்களிற்கு பாதுகாப்பான குடிதண்ணீர் வசதிகள் வழங்குவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 9,593 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 86.80 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 6,675.90 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 60.69 மில்லியன் இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 1,882.10 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 17.11 மில்லியன் இலங்கை மக்கள் வங்கியால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2012 மார்ச் 06 இல் தொடங்கியிருந்ததுடன் 2014 செப்தெம்பர் 05 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர், செயற்திட்டக் காலப்பகுதி 2017 மே 31 வரை 04 தடவைகள் நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின்

நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றை தொடர்ச்சியான அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தல்களிற்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின்

பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்

## 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ரூபா 62.20 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனம் மற்றும் 04 டபிள் கப் என்பன நடைமுறையல்லா சொத்துக்களாக கருதப்படுவதற்குப் பதிலாக தொடர்ச்சியாக நடைபெறும் வேலையின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது. மேலும், ரூபா 24.96 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 229,569 கிரயத்தில் 2015 இல் நிர்மாணிக்கப்பட்ட அலுவலக கட்டிடமும் நடைபெறும் வேலையின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

1987 இன் 03 ஆம் இலக்க அரச ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம், ரூபா 5 மில்லியன் அல்லது அதற்கு மேலான பெறுமதியுடைய ஒப்பந்தங்களை ஏற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்கள் அரச ஒப்பந்தத்தின் பதிவாளரின் கீழ் பதியப்பட வேண்டும். மேலும், ஒப்பந்தம் வழங்கிய பின்னர் 60 நாட்களிற்குள் அரச ஒப்பந்தத்தின் பதிவாளருடன் உடன்படிக்கைகள் பதியப்பட வேண்டும். எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுடன் ஈடுபட்ட ஒப்பந்தகாரர் மேற்குறிப்பிட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கியிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | யூஎஸ் டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | யூஎஸ் டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | யூஎஸ் டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| இந்தியா ஏற்றுமதி-இறக்குமதி வங்கி | 60.69 | 6,675.90 | | 2.82 | 387.12 | 47.32 | 6,142.09 |
| இலங்கை மக்கள் வங்கி | 17.11 | 1,882.10 | 350.00 | 0.76 | 102.17 | 11.23 | 1,456.92 |
| இலங்கை அரசாங்கம் | 9.00 | 1,035.00 | 140.85 | 0.36 | 50.04 | 3.57 | 450.94 |
| மொத்தம் | <u>86.80</u> | <u>9,593.00</u> | <u>490.85</u> | <u>3.94</u> | <u>539.33</u> | <u>62.12</u> | <u>8,049.95</u> |

**3.2 பௌதீக முன்னேற்றம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 77.30 சதவீதம் மற்றும் 80.05 சதவீதமாக இருந்தது. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொடர்புபட்ட வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அத்திகதியில் விநியோக வரிசைகளின் குழாயிடல் தொடர்புபட்ட வேலைகளில் 32.50 சதவீதத்தின் மெதுவான முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருந்தது. மேலும், நீர்த்தேக்கங்களின் நிர்மாணம், பரிமாற்றங்களின் குழாயிடல் மற்றும் விநியோக வலையமைப்புகள் என்பவற்றின் மீதான இடைக்கால கொடுப்பனவு 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றின் பௌதீக முன்னேற்றத்தை அளவீடு செய்யாமல் விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் கிட்னி நோய் பாதிக்கப்பட்ட வடமத்திய மாகாணத்திலுள்ள மக்களிற்கு பாதுகாப்பான குடிதண்ணீர் வசதிகள் வழங்குவதற்கு அவசர தேவையை தெரியப்படுத்துவதற்கு இலக்கிடப்பட்டன. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் முறையான அமுலாக்கல் திட்டம் இன்மை காரணமாக தாமதங்களுடன் அமுலாக்கப்பட்டதுடன் 04 தடவைகளில் செயற்திட்ட காலப்பகுதி நீடிக்கப்பட்டது.

**3.3. நிதிக் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் 2010 யூலை 26 இன் 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வுப் பிரிவால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 626 இன் பிரகாரம், வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் நிதிக்கூற்றுக்கள் செயற்திட்டத்தால் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு அமைய பேணப்பட்ட புறம்பான கணக்கீட்டு பதிவேடுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும். அதற்கு முரணாக, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் செயற்திட்ட கணக்கீட்டு பிரிவால் கையாளப்பட்ட இந்த செயற்திட்டம் உள்ளடங்கலாக வேறு 12 நன்கொடையாளர் நிதியளிக்கப்பட்ட

செயற்திட்டங்களின் கொடுக்கல் வாங்கல்களை பதிவதற்கு தனியொரு காசுப் புத்தகமே பேணப்பட்டிருந்தது.

### 3.4 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் உரிய நேரத்தில் வேலைகள் தொடங்குவதிலுள்ள தாமதம், போதிய மனித மற்றும் பௌதீக வளங்களை ஈடுபடுத்தாமை, உப ஒப்பந்தகாரரால் இடைநடுவில் சிவில் ஒப்பந்த வேலைகளைக் கைவிடல் மற்றும் முறையான காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்கள் வழங்குவதிலுள்ள தாமதல் போன்ற ஒப்பந்தகாரர்களின் பல தவறுகளின் விளைவால் தாமதமாக அமுலாக்கப்பட்டது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டமானது ஒப்பந்த உடன்படிக்கையின் 8.7 ஆம் உட்பிரிவின் பிரகாரம், தாமத கட்டணங்களை அறவிடுவதற்கு ஒப்பந்தகாரருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(ஆ) வடிகாலமைப்பு குழாய்கள், இரும்பு சட்டங்கள், கொட்டகைகள் போன்றன தம்புள்ள, கிருள்கிரியாவ, ஹபரண மற்றும் கெக்கிராவவிலுள்ள நிர்மாண தளங்களில் பாதுகாப்பற்ற முறையில் இருந்தமை 2017 மார்ச் 06 இல் மேற்கொள்ளப்பட்ட களப் பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்டது. மேலும், நீரிறைக்கும் இயந்திரங்கள், மின்பிறப்பாக்கிகள், மின்னியல் பொருட்கள் மற்றும் வடிகாலமைப்பு குழாய்கள் போன்ற பல உபகரணங்கள் சிவில் வேலைகளின் எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் திகதியை கருத்திற்கொள்ளாமல் ஐ.அ.டொலர் 4,237,968 கிரயத்தில் இறக்குமதி செய்திருந்ததுடன் நிர்மாண வேலைத் தளங்களில் பயனற்று இருந்தது என அவதானிக்கப்பட்டது. ஆகவே, வழங்கல் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட அத்தகைய சொத்துக்களின் உத்தரவாதக் காலப்பகுதி காலாவதியாகியிருந்தது.

### 3.5. நிதிக் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

இந்தியாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கி மற்றும் மக்கள் வங்கி என்பவற்றிடமிருந்து பெறப்பட்ட ரூபா 8,077.66 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான கடன் பெறுகைகள் பிரிக்கப்பட்டிருந்ததுடன் உரிய கடன் முகவர்களின் கடனாக ரூபா 1,243.96 மில்லியனும் மானியமாக ரூபா 6,833.70 மில்லியனும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2015 திசெம்பர் 31 வரையும் உரிய தரப்பினருடன் துணைநிலை கடன் உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருக்கவில்லை.